14.07.2025

O.S.No.200/2018

வா.சா.1.திரு.மகாராஜன் த.பெ. சின்னையா

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்கிறேன். நெல் வியாபாரமும் செய்கிறேன். கொடுக்கல் வாங்கல் எதுவும் செய்கிறேனா என்றால் இல்லை. என்னுடைய பிராதன தொழிலே கொடுக்கல் வாங்கல் தான் என்றாலும் அதை ஒப்பு கொண்டால் வழக்கிற்கு பாதகமாக செல்லும் என்பதால் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது பிரதிவாதிகளின் ஊரான சருகுவலையப்பட்டியில் உள்ளது என்றால் என்றால் சருகுவலையப்பட்டி பஞ்சாயத்தில் வடக்குவலையப்பட்டி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்திற்கு மிக அருகாமையில் பிரதிவாதிகள் குடியிருக்கிறார்கள் என்றால் நான் 1/2 கி.மீ தூரத்தில் இருக்கிறேன். பிரதிவாதிகள் 1/4 கி.மீ தூரத்தில் இருக்கிறார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் மட்டும் தான் கேட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட பின்பு தான் விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் விளம்புகை பரிகாரம் கேட்டு பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி சேவுகன் என்பவருக்கு 15 1/2 செண்டு கிரையம் கொடுத்துள்ளது நான் தான் சேவுகன் என்பவரை பினாமியாக வைத்து வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. வா.சா.ஆ 6 ஆவணத்தில் மற்ற சொத்துகளுடன் தாவா சொத்தையும் சேர்த்து ரசீது போட்டுள்ளேன்

என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு எந்தவிதமான அனுபவமும் இல்லாமல் மற்ற சொத்துகளுடன் சேர்த்து மோசடியாக ரசீது போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றானது நான் எனது அதிகாரத்தை பயன்படுத்தி மோசடியாக வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 8 ஆவணத்தில் குறிப்பிடப்படுள்ள பசலி 1426 காலத்தில் பிரதிவாதிகள் வாழை போட்டிருந்தார்கள் என்றாலும் வா.சா.ஆ 8 ஆவணத்தில் தரிசு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நாங்கள் தான் வாழை போட்டிருந்தோம். நாளது தேதிவரை தாவா சொத்தில் பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் நான் ஒருபோதும் அனுபவம் செய்யவில்லை என்றாலும் பிரதிவாதிகள் வாழை பயிரிட்டிருந்ததை மோசடியாக நான் பயிரிட்டுள்ளேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 19 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1434 பசலி காலத்தில் தாவா சொத்தில் வாழை பயிரிடப்பட்டிருந்தது என்றால் கொஞ்சம் நெல்லும், கொஞ்சம் வாழையும் பயிரிடப்பட்டிருந்தது. தாவா சொத்தில் பிரதிவாதிகள் தான் கொஞ்சம் நெல்லும், கொஞ்சம் வாழையும் பயிரிடப்பட்டிருந்தார்கள் என்றாலும் நான் பயிரிடவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனது அதிகாரத்தை பயன்படுத்தி வா.சா.ஆ 19 ஆவணத்தில் தரிசு என ஏற்றி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் கடனுக்காக கிரையம் எழுதி கொடுத்த சொத்தை பணத்தை திரும்ப பெற்று கொண்டு மீண்டும் எழுதி கொடுப்பதாக சொல்லிவிட்டு மோசடியாக சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இப்போதும் கடன்

தொகையை திரும்பி செலுத்த தயாராக உள்ளார்கள் என்றால் நான் என் சொந்த விவசாயத்திற்காக வாங்கினேன்.

2. காவல் துறையில் இருந்து பெற்று தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனது பணபலத்தை பயன்படுத்தி மோசடியாக பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இருந்த பிரதிவாதிகள் பயிரிட்டிருந்த வாழையை வெட்டி அழித்து விட்டதாக என்மீதும் மற்றும் 4 நபர்கள் மீதும் கீழவளவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் கீழவளவு காவல் நிலையத்தில் 06.03.2023 ஆம் தேதி புகார் கொடுத்தேன். உதவி ஆய்வாளர் சொத்தை பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுக்க கூறினார். நான் மறுக்கவே பொய்யாக வழக்கு போட்டார்கள். அந்த வழக்கில் நான் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமீன் உத்தரவு பெற்று பிணையில் உள்ளேன் என்றால் சரிதான். முன்ஜாமீன் உத்தரவில் நான் அரசு மேல்நிலைப்பள்ளி, தனியாமங்கலத்திற்கு ரூபாய் 1 லட்சம் கொடுக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் என்மீது வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பாக நான் கீழவளவு காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் என்னை வேலை செய்யவிடமாட்டுகிறார்கள் என்றும், போனைபுடுங்கி சென்றுவிட்டார்கள் என்றும் புகார் கொடுத்திருந்தேன். நான் கொடுத்த புகாரான பொய்யான புகார் என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் செல்வாக்கை பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்யவிடாமல் தடுத்துவிட்டார்கள். அது சம்மந்தமாக நான் நீதிமன்றத்தில் தனி புகார் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் கொடுத்த புகார் பொய்யானது என்பதால் தான்

நான் எந்த ஒரு சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் மீது எனது வாழையை வெட்டிவிட்டதாக புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. என்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால் முன்ஜாமீன் கேட்டு ஓடி கொண்டிருந்ததால் புகார் கொடுக்கவில்லை. நான் முன்ஜாமீன் உத்தரவு பெற்றபின்பு இன்றைய தேதி வரை பிரதிவாதிகளுக்கு எதிராக வாழை வெட்டியதாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 2024 ஆம் வருடம் கரும்பு கழிவுகளை என் வயலில் கொட்டியதாக புகார் கொடுத்துள்ளேன்.

3. வாழை அழிக்கப்பட்டபின்பு நாளது தேதிவரை தாவா சொத்தில் எந்த பயிரும் பயிர் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருகிறேன். போன பருவத்தில் தாவா சொத்தில் என்ன பயிரிட்டிருந்தேன் என்றால் 2024 ஆம் வருடம் தாவா சொத்தில் கொஞ்சம் நெல்லும், கொஞ்சம் வாழையும் பயிரிட்டிருந்தேன். நான் பயிரிட்டுள்ளதை காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். பிரதிவாதிகள் பயிரிட்டிருந்தை வாழையை அழித்தபின்பு நாளது தேதிவரை எந்த ஒரு பயிரும் பயிர் செய்யப்படவில்லை என்றாலும் நான் பயிர் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் 1 ம் பிரதிவாதிக்கு ரூபாய் 1 லட்சம் கடனாக கொடுத்திருந்தேன் என்றாலும் அதை அவர் உடனடியாக கொடுக்கமுடியாததால் தாவா சொத்தை கிரையமாக பதிவு செய்து கொண்டேன் என்றால் பணம் கொடுக்கும்போது பத்திரத்தை ரத்து செய்து கொடுப்பதாக உறுதி அளித்துவிட்டு, பிரதிவாதி பணம் கொடுக்க முற்படும்போது பணத்தை வாங்க மறுத்து நீதிமன்றத்தில் பொய்யாக வாதம்

செய்கிறேன் என்றால் இல்லை. இன்றைய தேதிவரை பிரதிவாதிகள் தான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றாலும் நான் பயிர் செய்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இல்லை. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றாலும் 1 ம் பிரதிவாதியின் எதிர்கோரிக்கை அனுமதிக்கப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.P.மகாராஜன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.